மூலக்காட்டுப் பள்ளத்திற்குக் கரை அமைப்பு

*172 வினு—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேட்டூர் தாலூக்கா, செட்டியூர் கண்ணும்பூச்சி கிராமம், மூலக் காட்டுப் பள்ளத்தில் 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கரையமைப்புத் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இது போன்று சிறு சிறு திட்டங்கள், பல பெரிய திட்டங்கள் தேங்கி நிற்பதற்குக் காரணம் என்ன ? சீப் இன்ஜினீயர் அதிகாரத்தின் கீழ் எவ்வளவு ரூபாய் வரையில் உள்ள திட்டங்களுக்கு அனுமதி அளிக்கலாம் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைமைப் பொறியாளர் அதிகாரத்தின் கீழ் ரூ. 1 லட்சம் வரை அனுமதி அளிக்கலாம். இத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் நிலங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் சேர்ந்து விடுவதால் இத் திட்டம் கைவிடப்பட்டது.

தரங்கம்பாடிப் பகுதியில் கடலரிப்பு

* 173 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூக்கா, தரங்கம்பாடி கோட்டைப் பகுதியில் கடலரிப்பைத் தடுத்து நிறுத்திட அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தரங்கம்பாடி கோட்டைப் பகுதியில் கடலரிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

கதர் இயக்குநர் பதவி

* 174 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கதர் இயக்குநராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?